கண் வைத்திய நிபுணர்கள்
பேர்க்க செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registred as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 22 ஞாயிற்றுக்கிழமை (05 - 06 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 189

# தமிழ் மாணவர் தமது கல்வியைத் தொடர எழுச்சியுடன் போராடியே ஆக வேண்டும்

## முழு மனிதராக உறுதி கொள்ள மாணவர் அமைப்பு அறை கூவல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழீழத்தைப் பொறுத்தவரை, மாணவர்களது கல்வியே அரசியலாக்கப்பட்டுள்ளது. தமிழ் மாணவர்களது கல்வித் தகைமை வளர்ச்சி அடையவிடாது தடுக்கப்படுவது மட்டுமன்றி —

கல்வித் தகைமையைத் தாழ்த்தி அழித்துவிடும் நோக்கோடு திட்டமிட்ட இன ஒழிப்பில் இறங்கி —

சிங்கள அரசே தமிழ் மாணவர்களது கல்வியை அரசியலாக்கும் போது —

தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கும், வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் எழுச்சியுடன் போராடியே ஆகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று கொண்டாடப்படும் மாணவர் எழுச்சி நாளையொட்டி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், சமுதாயத்துக்குப் பயன்படத் தக்க வரையில் முழுமையான மனிதர்களாக ஆக வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிக்கையில் மாணவர்களுக்கு அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொழிலாளர் நாள், ஆசிரியர் நாள் போன்று மாணவர் நாளும் கொண்டாடப்பட வேண்டும் என்று கல்விச் சமூகத்தில் ஏற்பட்ட விருப்பின் அடிப்படையில், ஜூன் 5 மாணவர் எழுச்சி நாளாகக் குறிக்கப்பட்டு இந்த ஆண்டிலிருந்து கொண்டாடப்படுகிறது.

உலக சமுதாயத்தில் துடிப்பாகச் செயற்படக் கூடியவர்களில் பெரும் பகுதியினர் மாணவர்களே, உலகில் நடைபெற்ற, நடைபெற்று வருகின்ற மாற்றங்கள், புரட்சிகள், வளர்ச்சிகள் என்பனவற்றில் எல்லாம் பெரும் பங்கு வகித்தவர்கள் மாணவர்களே.

உலகில் நடைபெற்று வந்த நடைபெற்றுவருகின்ற தேசிய விடுதலைப் போராட்டங்கள் புரட்சிகளெல்லாம் முகிழ்த்தெழவும், வீறு கொள்ளவும் வைத்தவர்களில் முதன்மையானவர்கள் மாணவர்களே, மாணவர் வலு என்பது உலகில் ஆற்றல் மிக்க வலு என்பது எல்லோராலும் உணரப்பட்டவையே.

எதிர்காலத்தில் வர இருக்கின்ற மாற்றங்களை, வளர்ச்சிகளை பெரிதும் எதிர் நோக்க இருப்பவர்களும் அவர்களே.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 5

குடும்ப அட்டைப் பகுதிச் செயலகங்கள் அனைத்தும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு குடும்ப அட்டைப் பகுதியினர் அறியத்தருகின்றனர். (இ)

## உரும்பராயில் இன்று மாலை சிவகுமாரன் நினைவுகூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

தியாகி பொன். சிவகுமாரனின் 20 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இதனை ஒட்டி உரும்பராயில் நினைவு நாள் பொதுக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு உரும்பராய்ச் சந்திக்கு அண்மையில் உள்ள தியாகி சிவகுமாரன் நினைவாலயத்தில் கோப்பாய் வட்டப் பொறுப்பாளர் திரு. சோழன் தலைமையில் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெறும்.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஈகைச்சுடரும் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தேசியக் கொடியை ஏற்றுவதுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

தியாகி சிவகுமாரனின் திருவுருவப் படத்திற்கு அவரது தாயார் மலர் மாலை அணிவிப்பார்.

இறுதியாக கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் மற்றும் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர். நினைவுரை நிகழ்த்துவர்.

(ஓ-162)

## மணலாற்றில் சிப்பாய் பலி

### மற்றும் இருவர் காயம்

கொழும்பு, ஜூன். 5

மணலாற்றுக்கு வடக்கே இராணுவத்தினர் தேடி அழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் விடுதலைப் புலிகளின் வெடிகுண்டு ஒன்றுக்கு ஓர் இராணுவச் சிப்பாய் பலியானார். இரண்டு பேர் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் 60 மில்லி மீற்றர் பீரங்கி மற்றும் சிறிய ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர்.

இராணுவத்தினர் பதில் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும்—

விடுதலைப் புலிகள் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புப் பற்றி இன்னமும் தெரியவில்லை என்றும்—இராணுவப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார் என இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-162)

## துறைமுகத்தில் நேற்று திடீர் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூன். 5

கொழும்புத் துறைமுகத்தில் உள்ள 20 ஆயிரம் தொழிலாளர்கள் நேற்று திடீரென வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் துறைமுகப் பணிகள் முற்றாகத் தடைப்பட்டன.

துறைமுகத் தொழிலாளர் ஒருவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் ஒருவரின் கவனமின்மையால் அந்தத் தொழிலாளியின் விரல் ஒன்றைத் துண்டிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது என்றும்—

அந்த டாக்டரின் மீது நடவடிக்கை எடுக்கும்படியும்—கோரியே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலை நிறுத்தத்தால் துறைமுகத்தில் தரித்து நின்ற 40 கப்பல்களில் இருந்து பொருள்களை ஏற்றி இறக்கும் பணி பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## அமைச்சரவை மாற்றம் சாத்தியம் இல்லை?

### காமினிக்கு மட்டும் இடம்

கொழும்பு, ஜூன் 5

எதிர்பார்க்கப்பட்டபடி அமைச்சரவை மாற்றம் இடம் பெறமாட்டாது என்றும் —

தற்போது அமைச்சர்களின் பொறுப்பில் இருக்கும் அமைச்சுகள் தான் மாற்றஞ்செய்யப்படும் என்றும் — அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி த ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அமைச்சரவையில் புதிதாக காமினி திஸநாயகா மட்டுமே

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகாவை நிறுத்த தயார்

### சிறிமாவோ நேற்று அறிக்கை

கொழும்பு, ஜூன் 5

பெரும்பாலானவர்களின் கோரிக்கையை ஏற்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக சந்திரிகாவை நிறுத்த தாம் தயாராக இருப்பதாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளியாகும் தேசியப் பத்திரிகைகளுக்கு நேற்று அனுப்பியுள்ள அறிக்கை ஒன்றில் திருமதி பண்டாரநாயக்கா இதனைத் தெரிவித்துள்ளதாக "ராவய" பத்திரிகை ஆசிரியர் விக்டர்ஐவன் கூறியுள்ளார்.

தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து சர்ச்சையைக் கிளப்பவேண்டாம் என்றும்—

மக்களின் விருப்பம் அதுவென்றால் சந்திரிகாவை ஜனாதிபதி வேட்பாளராக்க தாம் தயாராக இருப்பதாகவும்—அந்த அறிக்கையில் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகாவே என்பது

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிறிசேனாவின் இடம் றொனிடிமெல்லுக்கு

கொழும்பு, ஜூன் 5

பதவி விலகும் இரண்டாவது ஐ. தே. க. தேசியப் பட்டியல் எம். பி. ஆர். ஏ. டி. சிறிசேனவின் இடத்துக்கு றொனி டிமெல் நியமிக்கப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிசேன தனது பிரியாவிடைப் பேச்சை நாடாளுமன்றத்தில் நாளை மறு நாள் செவ்வாய்க் கிழமை நிகழ்த்த இருப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பிரதிநிதிகளுடன் பிரேமச்சந்திரா பேச்சு

### சாதகமான நிலை உருவாகியிருக்கிறதாம்

கொழும்பு, ஜூன் 5

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் கொழும்பில் தாம் பேச்சு நடத்தி இருப்பதாகவும் —

அப்பேச்சுக்களில் சாதகமான நிலை ஏற்பட்டிருப்பதாகவும் — வடமேல்மாகாண முதலமைச்சர் ஜி எம். பிரேமச்சந்திரா லங்காதீப சிங்கள நாளிதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இப்பேச்சுகள் பற்றிய விபரங்களை இப்போது வெளியிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த கட்டமாக யாழ்ப்பாணம் சென்று, அங்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வந்து இந்த யுத்தத்துக்கு முடிவு காணக் கூடிய சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வதில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சமாதான முயற்சி, ஜனாதிபதி விஜேதுங்காவின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே வெற்றியளிக்கும் என்றும் பிரேமச்சந்திரா தெரிவித்தார்.

'எனது இம்முயற்சி வெற்றி பெற ஜனாதிபதியின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளேன்' — என்றும் அவர் சொன்னார்.

வடக்குக்கும் தெற்குக்கும் இடையே ஏதாவது தொடர்பை அல்லது சமாதான பேச்சை மேற்கொள்வதாயின் அதற்குரிய ஏற்பாடுகளைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முரளி



கட்சிக்குள் ! எதிர்ப்பின்றி காரியத்தை முடிக்க அம்மாவும் மகளும் நாடகம் ஆடுகினம் பாருங்கோ..... !

## கிரனேட் வெடித்து இரு பொலிஸார் காயம்

கொழும்பு. ஜூன் 5

பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்தையில் கிரனேட் ஒன்று வெடித்ததில் கடமையில் இருந்த இரு பொலிஸார் காயமடைந்தனர்.

அவர்கள் இருவரும் உடனடியாக வெலிகந்தை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னர் அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (இ-5)

## மற்றும் ஒரு தேசியப் பட்டியல் எம். பி. நாளை ராஜினாமா

### இவருடன் சேர்த்து இதுவரை மூவர் பதவி துறப்பு

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம். பியான பறங்கி இனப் பிரதிநிதி ஏ.ஜே. றொபட்சன் நாளை தனது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளார்.

ஜனாதிபதி விஜேதுங்காவை நாளை அவர் சந்தித்து தமது ராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பிப்பார் என்றும்—

தமது ராஜினாமா குறித்து நாடாளுமன்றத்தில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது

தமது ராஜினாமா கட்சியை வலுப்படுத்தும் என்றும், எதிர்வரும் தேர்தல்களில் ஜனாதிபதிக்குத் தேவையான ஆதரவைத் திரட்டும் வாய்ப்பை உறுதிப்படுத்தும் என்றும் றொபட்ஸன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. பதவியில் இருந்து அண்மையில் விலகிய மூன்றாவது தேசியப் பட்டியல் எம். பி. இவராவார். ஏற்கனவே தேசியப் பட்டியல் எம்.பிக்களான எம். கே. அமீட், ஆர். ஏ. டி. சிறிசேன ஆகியோர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர். (இ-5-6)

## அரசாங்கத்தின் மீது மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

### எதிரணிக் கட்சிகள் முயற்சி

கொழும்பு, ஜூன்

அரசாங்கத்தின் மீது மீண்டும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எதிரணிக்கட்சிகள் நடவடிக்கை எடுத்த வருகின்றன.

அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இப்பிரேரணையைத் தாக்கல் செய்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பு தயாரித்த உடன்பாட்டில் கைவெழுத்திட்ட இலங்கை வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீத் பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸுக்குச் சென்றதை தவறியதற்காக அரசு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று இந்நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து அரசு தவறிவிட்டதாகவும் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-எ)

## சிறிசேன கூரேயிடம் பூரண நம்பிக்கை!

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5

அமைச்சர் சிறிசேன கூரேயிடம் தாம் பூரண நம்பிக்கை வைத்திருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

அனுராதபுரம் மாவட்ட ஐ. தே. க. மாநாட்டில் பேசிய போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் கூரேயிடம் பெரும் பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன. வீடமைப்பு நிர்மாணத்துறையுடன் மேலதிகமாக நகர அபிவிருத்தி அமைச்சராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

### வடக்கு-கிழக்கு இணைப்பு சர்ச்சைக்குத் தீர்வு:

## தமிழ்-முஸ்லிம் கட்சிகள் கூட்டாக யோசனை சமர்ப்பிக்க இணக்கம்

கொழும்பு, ஜூ 5

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் போது—

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரத்தினால் உருவாக மாண ஒரு தீர்வை காணும் நோக்கில்—

புதிய யோசனை ஒன்றை தமிழ் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் கூட்டாக முன்வைக்க இணங்கியிருப்பதாக கொழும்பு தமிழ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் இணைந்த பிராந்திய சபை ஒன்றையும் (Regional Council) —

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச சபைகளை உள்ளடக்கி தனி முஸ்லிம் அலகாகக் கொண்டு உப பிராந்திய சபை ஒன்றையும் உருவாக்குவதே புதிய யோசனை எனத் தெரிய வருகிறது.

இந்தியாவில் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் போன்று அது அமையும் என்றும் தெரிய வருகிறது.

முஸ்லிம்களை பெரும்பான்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

1950 களில்





## அமரர் கண்மணி குணசேகரம்

(சுதுமலை கோபாலர் மகள்)

தோற்றம்: **10 08-1931** மறைவு: **06-05-1994**

**திதி: 05 - 06 - 1994**

அம்மா உனையழைத்தே அண்ணர் நயினார்லிங்கம்
தம்மோ டுறையத் தலைப்பட்டார் - நிம்மதியாய்ப்
போவோ மென இருந்த புண்ணியத்தின் பொக்கிஷமே
சாவோ டிணைந்தாய் தனித்து

(மகள்: புஷ்பராணி)

இம்மா நிலமீ திலங்கிமிளிர் ஜெர்மனிக்கு
அம்மா உனையழைக்க ஆவல் கொண்டே - அம்மா உன்
அன்பு மகள் புஷ்ப ராணியையும் தானனுப்பத்
தென் புலத்திற் காணாய் தெரிந்து

(மகன்: நயினார்லிங்கம் ஜேர்மனி)

முடியழகா வென் றனுதினமென்னை விரும்பி நின்ற
படியதை யாதும் மறுத்தறி யாமலிப் பாருலகிற்
கொடியவனாமென் குறிப்பறிந்தே யெமை விண்டு சென்றாய்
அடிமுடி தேடியும் கண்டறியாத அரனிடத்தே

(மகன்: முடியழகன் இந்தியா)

இன்று 05-06-1994 காலை 10-00 மணி முதல் தண்டிக் கடலில் அஸ்தி கரைத்தலிலும், அதனை தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்பு உரிமை தழுவித் தயவாக வேண்டுகிறோம்.

06-05-1994 ஆம் திகதியன்று இவ்வுலகை விட்டகன்ற எம் குல விளக்கின் மரணச் சடங்குகளிலும், இறுதிக் கிரியைகளிலும் கலந்து வேண்டிய நேரங்களில் வேண்டியவற்றைச் செய்தும் பற்பல உதவிகளைச் செய்தும் எமக்கு ஆறுதல் கூறி அரவணைத்த அனைவர்க்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.
மருமக்கள். பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

87, ஏ. வி. றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

எஸ். கே. அன்னலிங்கம் (மகன்)
HOTEL INTERCONTINENTAL

[31191]

---

## C.C.C வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

5/4/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கண், காது, மூக்கு, தொண்டை (E. N. T.) முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைக்குரிய வைத்தியம், சருமநோய்கள் எல்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது.

(யாழ். அரசாங்க வைத்தியசாலை பழைய O. P. D. முன்பாக)

- நிர்வாகி

[31268]

---

## நன்றி நவிலல்

### ARTHUR GANESHAPILLAI JOSEPH

(Retd P. T. I )

எமைவிட்டு இறைவனோடு வாழச் சென்ற அன்னாரின் இறுதி ஆராதனையில் கலந்து கொண்டு ஆறுதலளித்த அனைவருக்கும், அஞ்சலிகள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மலர் வளையம் சாத்தியோர்களுக்கும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளுக்கும், பல்வேறு வழிகளில் உதவியும், ஒத்தாசையும் வழங்கியோர்களுக்கும், ஆராதனைகளை நடத்திய குருமார்களுக்கும், சபை அங்கத்தவர்களுக்கும், சுகவீனமுற்று இருந்த வேளையில் அவரை பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் மற்றும் நோயாளர், நலன் புரிச்சங்கத்தினர் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

— திருமதி செல்வதேவி ஜோசப் (மனைவி)

199/1, கின்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(கி-8261)

---

# எடிசன் அக்கடமி

## O/L DAY CLASSES

| யாழ். இந்து அருகில் K. K. S. வீதி, யாழ்ப்பாணம். | கொக்குவில் இந்து அருகில் K. K. S. வீதி, கொக்குவில், |
|---|---|
| **பிரிவு-2** | **பிரிவு-3** |
| கணிதம் — B. P. பாஸ்கரன் | கணிதம் — B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல், J. J. கொலின்ஸ் | விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல், J. J. கொலின்ஸ் |
| ச. கல்வி — K. S. முத்துலிங்கம் | ச. கல்வி — க கோபி |
| தமிழ் — K. இராஜலிங்கம் | தமிழ் — K. இராஜலிங்கம் |
| ஆங்கிலம் — C. சத்தியமூர்த்தி | ஆங்கிலம் — C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் — K. விக்கி | வர்த்தகம் — T. அரவிந்தன் |
| சித்திரம் — S. P. சோதி | சித்திரம் — S P. சோதி |

புதிய பிரிவுகள் ஆரம்பம்: **06-06-1994**
திங்கள் 8 மணி

(சி/8368)

---

# தென்மராட்சி கோட்ட கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5
தென்மராட்சிக் கோட்டத் திற்குட்பட்ட அனைத்து ஸ்ரீத்தவர்களுக்குமான கலந்துரையாடலும்.—
தென்மராட்சிக் கோட்டத் திற்குட்பட்ட அனைத்துக் கோயில் நிர்வாக சபையினர் விளையாட்டுக் கழக, ச. ச நிலைய நிர்வாக சபையினர், தொழிற்சங்க நிர்வாக சபையினர் ஆகியோருக்கான கலந்துரையாடலும்—
நாளை மறுதினம் செவ்வாக்கிழமை முறையே பிற்பகல் 2 மணிக்கும் 4 மணிக்கும் சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெறும்.
இக் கலந்துரையாடல்களில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கோரியுள்ளார்.
(இ—ஏ)

# ராணுவ நடவடிக்கையால் பாதிப்புற்ற கூ. சங்கங்களுக்கு இழப்பீடு நடவடிக்கை ஏதுமில்லை

கொழும்பு, ஜூன் 5
1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு உடைமைகளை இழந்த கூட்டுறவுச் சங்கங்களும்—
இடம்பெயர்ந்து வேறிடங்களில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களும் இழப்பீடுகளுக்கு நிவாரணம் கோரி யாழ். அரச அதிபர் மூலமாக வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட முறையீடுகள் தொடர்பாக இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
இராணுவ நடவடிக்கை காரணமாக இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுமார் 10கோடி ரூபா இழப்பீடு ஏற்பட்டதென மதிப்பிடப்பட்டுள்ளது.
தீவகத்தைச் சேர்ந்த ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு,வேலணை, காரைநகர் கூட்டுறவுச் சங்கங்களும்—
வலிகாமம் பகுதியைச் சேர்ந்த தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, மல்லாகம் மற்றும் அச்சுவேலி கூட்டுறவுச் சங்கங்களும் இடம் பெயர்ந்தவைகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ-ஏ-17)

## ஆஸ்பத்திரிக்கு ஜெனரேற்றர்

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ் போதனா வைத்தியசாலைக்கென மேலும் 200 கே. வி. வலு கொண்ட ஜெனரேற்றர் ஒன்று கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவுள்ளது.
இது பிரிட்டிஷ் அரசாங்கம் யாழ் ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்ததாகும்.
இதேவேளை,
ஆஸ்பத்திரி நிர்வாக பகுதியின் தேவைகளுக்கென ஓட்டோ வாகனம் ஒன்றை கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

## கலந்துரையாடல்

வங்கி அமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவினர் சமக சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் ஒன்றினை நடத்த வுள்ளனர்.
வலிகாமம் பகுதியிலுள்ள சி. க. கூ. சங்க நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் இன்று ஞாயிறு பி. பகல் 3 மணிக்கு கோண்டாவில் செயலகத்தில் நடைபெறும்.
(ஏ)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ் மாநகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து போடப்பட்டுவருகிறது.
நாளை திங்கட்கிழமை ஏற்றப்படும் இடங்கள் வருமாறு:—
★ காலை 8மணி தொடக்கம் 10 மணி வரை — நல்லூர் மாநகராட்சி மன்றம்,பருத்தித்துறைவீதி சட்டநாதர் சனசமூக நிலையம்.
★ காலை 10. 30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை — அரியாலை கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை திருமகள் சனசமூக நிலையம்.
★ பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை — செம்மணிவீதி பாரதி சனசமூக நிலையம் நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்
(ஒ—17)

---

விரைவில்......
[illegible]
சஞ்சிகை: 07
(31273)

---

## BECON

யாழ்ப்பாணம்

O/L DAY CLASS

ஆரம்பம்;
06 - 06 - 94
8 A. M.

(சி 8408)

---

## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி

# மாபெரும் கல்விக் கண்காட்சி - 94

## ST. PATRICK'S COLLEGE EXHIBITION - 94

காலம்: **6, 7, 8 ஜூன் 94**
அனுமதி நேரம்: காலை 8-30 மணி மாலை 3-30 மணி வரை
கண்காட்சி நேரம்: மாலை 6 மணி வரை

### கண்ணுக்கும் கருத்துக்கும் .........

- தமிழர் பிரதேச பொருளாதார சமூக மொழி வளமும் தமிழில் சித்த மருத்துவ இயலும்
- உயர்தர வகுப்பு கணித, விஞ்ஞான, வணிக கலைப்பாடங்களின் செயன் முறைகள்
- பண்டைய நாகரிகத்தின் விழுமியங்கள் புராதன "டயனோசர்"
- கணித விஞ்ஞானத்தின் வியத்தகு விந்தைகள்
- சூழலியல் தொடர்பான தொலைக்காட்சி
- கணனிச் செயற்பாடுகள் - இலத்திரனியல் விந்தைகள்
- சமயங்களின் தத்துவார்த்தமும் நடைமுறையும், சிற்ப சித்திர ஓவிய நடன கலைபண்பாட்டு அம்சங்கள்
- விநோத விளையாட்டுக்களும் இசை நிகழ்ச்சியும்

● குறிப்பு:

1. பிரவேசக் கட்டணம்
   ★ ஆண்டு ஐந்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் கட்டணம் ரூபா 5/-
   ★ ஆண்டு ஐந்தும் அதற்குக் கீழும் கட்டணம் ரூபா 3/-
2. பாடசாலை மாணவர்களுக்கு காலை 8-30 முதல் 1-30 வரை
3. இதுவரை தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காத பாடசாலைகளும் ஏனைய கல்வி நிறுவனங்களும் நேரடியாக அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு தங்களுக்குரிய காட்சி நேரத்தை பெற்றுக் கொள்ளவும்.
4. மாய விநோதக் காட்சிகள் குறித்த நேரத்தில் மட்டும் நடைபெறும்.
5. உயர்தர விஞ்ஞான மாணவர்களுக்குரிய செயன்முறைகள் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் முன்னனுமதியுடன் காண்பிக்கப்படும்.
6. பொது மக்கள் மாலை 1-30 முதல் 3-30 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
7. குடும்பப் பிரவேசச் சீட்டுக்கள் பெற்றவர்களுக்கு காட்சி நேரத்தில் எந்நேரமும் அனுமதி வழங்கப்படும்.

- கண்காட்சி அமைப்புக் குழு

விளம்பர அன்பளிப்பு: வைத்திய கலாநிதி ஏ. உமாகாந்தன்
[illegible] நாயன்மார்கட்டு.

[31265]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்தின் விடுதலைக்கு உரமூட்டும் தமிழீழ மாணவரின் வீரமிகு எழுச்சி!

இன்று நாம் விடுதலைப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம்.

இந்த விடுதலை மண் விடுதலை, இன விடுதலை, மொழி விடுதலை, பொருளாதார அல்லது பொருண்மிய விடுதலை, ஏழ்மைத் தனத்திலும், அடிமைத் தனத்திலும், சோம்பேறித்தனத்திலும் இருந்து விடுதலை, பெண் விடுதலை, ஆன்மீக விடுதலை என எங்கும் விடுதலை என்பதே பேச்சாகவும் நாம் சுவாசிக்கும் மூச்சாகவும் இருக்கிறது.

இன்று விடுதலை உணர்வு, யாருக்கு, எப்போது, ஏன் வந்தது? இளைய தமிழீழத் தலைமுறையினரின் கல்வி வழி முன்னேற்றத்தில் எப்போது அழுத்தமும், அதிகாரமும், ஆக்கிரமிப்பும் தலைகாட்டத் தலைப்பட்டதோ அன்று தொட்டே மாணவர் உள்ளத்தில் விடுதலை உணர்வு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

அந்த உணர்வு ஆரம்பத்தில் உள்ளொளி பரப்பிய சாத்வீகமாக ஒளிர்ந்து சட்ட மறுப்பாகச் சுவாலை விட்டு மாவீரன் உரும்பிராய் சிவகுமாரனால் பொறிப் பறக்கச் செய்யப் பெற்று, விடுதலை வேள்வியாகத் தமிழீழத் தேசியத் தலைவரால் வீரம், மானம், உறுதி, தற்கொடை, தியாகம் என்ற அர்ப்பணிப்புகளுடன் முன்னெடுக்கப்படுகின்றது. நம்புதற்குரிய வீரர் பலர் தம் நல்லுயிர் ஈந்துள்ளனர். இன்னும் ஈய்வதற்காக அச்சமில்லை அச்சமில்லை என்று அணிதிரண்டு நிற்கின்றனர்.

### வீரப் பெருந்திறல் கூட்டம்

நேற்றுவரை மாணவர்களாக இருந்தவர்கள் இன்று காணரும் வீரர் பெருந்திருக் கூட்டமாக நிற்கின்றனர். இவனா இப்படி வீரனானான்! இவனா இப்படிச் சாதனை செய்தான்! இவனா இப்படிப் பெருமை பெற்றான்! இவனா இதைக் கண்டு பிடித்தான்! என்று வியக்கும் வகையில், களத்திலும், நிலத்திலும் காலகடுக்க நிற்போர் காரியம் ஆற்றுகிறார்கள். இந்த உணர்வு எதனால் வந்தது? தன்னை மறந்து தன்நாமம் கெட்டுத் தமிழின விடுதலைக்காய்த் தலைப்பட்டதால் வந்தது.

ஒல்லாந்து தேசத்தைக் கடல் கொண்டு போகாமல் காத்த அந்த வீரச்சிறுவனைப் போல் எல்லைகள் தோறும் எதிரியின் நுழைவழியெல்லாம் நின்று அல்லும் பகலும் காவல் செய்கின்ற வீரப் பெருந்திறல் கூட்டத்தினரால் நமது மண்ணில் நாம் நிம்மதியோடு வாழ்கின்றோம்.

ஒவ்வொரு மாணவருக்கும் ஏதோ ஒருவகையில் ஒவ்வோர் ஆற்றல் இருக்கிறது. அந்த ஆற்றல் எந்த வகையில் எமது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உதவும் என்று எண்ணித் துணிந்து பங்களிப்புச் செய்ய வேண்டும்.

''ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும் உதய ஞாயிறொப்ப'' ஒவ்வொரு மாணவனும் தன் ஆற்றல்களை கதிர்களாக வீசி, விடுதலை ஒளியைப் பெருக்கியும் பரப்பியும் வர வேண்டும்.

### மாணவரின் பங்களிப்பு

சோம்பல், பொறுப்பின்மை, சுயநலம் என்பவற்றை விட்டு, ஒளி படைத்த கண்களோடும், உறுதி கொண்ட நெஞ்சினோடும் தெளிவு பெற்ற மதியினோடும், கல்விக்கு ஏற்பட்டுள்ள தடைகளைத் தாண்டித் தேர்வுகளிலும், பிற கல்வி சார் போட்டிகளிலும் சாதனை படைக்க மாணவர் உறுதி பூண வேண்டும். இந்தப் போர்ச்சூழலில் அற்றாராகவும் அளர்ந்தாராகவும் இருப்பவர்களுக்கு உதவ மாணவர்கள் முன் வரவேண்டும். பாடசாலைகளில் உள்ள சமூகங்கள் மன்றங்கள் மூலம் சிரமதானம், இரத்ததானம் மற்றும் பராமரித்தல் தொண்டுகளில் ஓய்வு நேரங்களைச் செலவிடுதல் வேண்டும். கல்வி அறிவு கைவரப் பெறாத மக்களுக்குப் படிப்பகங்கள் வைத்துக் கல்வி புகட்ட வேண்டும். நாடகங்கள், நடனங்கள் கூத்து வகைகள், கட்டுரைகள், நுண்கலைகள் கவிதைகள் மூலம் நமது கலையையும் பண்பாட்டையும் வளர்க்க வேண்டும்.

தமிழ் மொழியையும் அதன் தூய பயன் பாட்டையும் வளர்க்கும் விதத்தில் எழுத்திலும், பேச்சிலும், 'எல்லாம் தமிழ்' என்ற கோட்பாட்டை முன்னெடுக்க வேண்டும். பொது அறிவை வளர்ப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். நமது தேசிய விளையாட்டுக்களை வருத்தி செய்ய வேண்டும். பொழுது போக்கிற்காக வீட்டுத்தோட்டம், பயனுள்ள பிராணிகளை வளர்த்தல், நடமாடும் நூலகங்களை அமைத்தல், தருணத்திற்கேற்ற உபகரணங்களைச் செய்தல், கையெழுத்து ஏடுகளை உருவாக்குதல் என்பவற்றில் ஈடுபடவேண்டும். வாழ்க்கைத் திறன்களை வளர்க்கும் வகையில் சுயமுயற்சிகளில் ஈடுபட்டுக் குடிசைக் கைத்தொழில்களை வளப்படுத்தவேண்டும். ஏதோ வகையில் ஒவ்வொரு குடும்பமும் தன்நிறைவைப் பெறும் வகையில் பெற்றோர்க்கு உதவுதல் வேண்டும்.

### பாரிய பொறுப்பு

நான் கற்ற கல்வி எவ்வகையிலும் பிறந்த பொன்னாட்டிற்கும், தாய் மொழிக்கும், இனத்திற்கும் பயன்படும் வகையில் இந்த மண்ணில் காலூன்றி நின்று இன்பத்திலும், துன்பத்தில் பங்கு கொள்ளவேண்டும் என்ற உணர்வு மாணவர்களுக்கு ஏற்படுமாயின் நாம் விடுதலையின் பயனை அனுபவிப்பவர்களாக வாழ்வது நிச்சயம். இதுவே மாணவர்கள் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும்.

''மலர்கள் அரும்பாக இருக்கும் போது வண்டுகள் ரீங்காரம் செய்து வருவதில்லை. அவை மலர்ந்து தேன் நிறைந்து மணம் பரப்பும் போது தான் வண்டுகள் அவற்றை நாடி வருகின்றது. அதே போல் நல்ல எண்ணங்கள் செயலாகும் போதுதான் புகழ் மனிதனைத்தேடி வருகின்றது.'' விடுதலையை நோக்கிய எண்ணங்கள் மலர்த்தப்படும் போது நாடும், மொழியும், இனமும் புகழ்பெற்று வாழும். ★

– நா. க. சண்முகநாதபிள்ளை –
அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## மாணவர் எழுச்சிப் பண்

மாணாக்கர் - நல்ல
மாணாக்கர்.
பண்பெனு முருவாய்ப் பாடறிந் தொழுகி
பணிவுட னன்பினை நெஞ்சினி லெழுதி
மானமும் வீரமும் உயிரெனக் கருதி
மாண்புடனே சிறந்தோங்கிடு மவர

(மா)

கல்வி யெனுங் கட லாடிடுவார்
கனிவுறு பணிதலை சூடிடுவார்
உள்ளுற விடுதலை ஒளிவளர்ப்பார்
உலக நல் லெழிலுற
உழைப்பவ ரவரே

(மா)

பெற்றவர் பெரிய ராசிரியர்
போற்றிடத் தகைமெனப் பொலிவுறுவார்
நற்றிரு நாடினம் வாழ்வுறவே
நலிவுறு பணிசெயும்
வலிபெறு மவரே

(மா)

கற்பவை கசடறக் கற்றிடுவார்
கற்றவை மற்றவர் அறிந்திடவே
முற்றிய பணி செய
முனைபவ ரவரே

(மா)

கல்வியு மொழுக்கமும் உயிரெனுவார்
அக்கலை கலைமன உரமுடை யார்
தெள்ளிய அறிவெனும் சுடர்விழியார்
வல்லவ ரெனப் புகழ்
வளப்பவ ரவரே.

(மா)

# அதிகாரத்தை ஒப்படைக்க மறுத்து அடம்பிடிக்கும் ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர்கள்

ஹெய்ட்டி மீது அமெரிக்கா எந்நேரமும் படை எடுப்பு நடத்தலாம் என்ற நிலையினை அடுத்த சர்வதேச நாடுகளின் கவனம் தற்போது கரிபியன் கடல் பிராந்தியத்தை நோக்கி திரும்பி இருக்கிறது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி ஜீன் பேர்ட்றன்ட் அரிஸ்ரைட்டை (Jean Bertrand Aristds) மீண்டும் பதவியில் அமர்த்தும் முயற்சியில் அமெரிக்கா இதுவரை வெற்றி பெறவில்லை.

ஹெய்ட்டி ராணுவத் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் றாவுல் செட்றாஸ் (Raoul Cedras) அமெரிக்கத் தலைவர் கிளின்ரனுக்கு ஏற்கனவே அளித்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டு விட்டன.

இந்த நிலையிலேயே அமெரிக்கா ராணுவ நடவடிக்கை குறித்து சிந்தித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### மதகுருவாக இருந்தவர்

ஜீன் பேர்ட்றண்ட் அரிஸ்ரைட் முன்பு மதகுருவாக இருந்தவர்.

1990 டிசம்பரில் ஜனநாயக ரீதியில் ஹெய்ட்டியில் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் அரிஸ்ரைட் 69 சதவீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் ஒரு வருட காலத்துக்காவது அவரினால் பதவியில் நீடிக்க முடியவில்லை.

1991 செப்டம்பர் 30 ஆம் திகதி இராணுவப் புரட்சியின் போது அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். லெப். ஜெனரல் றாவுல் செட்றாஸ் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட அரிஸ்ரைட் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் அடைந்தார்.

### காலக்கெடுக்களை அசட்டை செய்த ராணுவ ஆட்சியாளர்

புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய செட்றாஸை பதவி நீக்கி விட்டு அவரின் இடத்தில் மீண்டும் அரிஸ்ரைட்டையை அமர்த்தும் அமெரிக்காவின் நடவடிக்கைகள் எதிர்பார்த்ததைப் போன்று சுலபமாக நிறைவேறவில்லை.

இதனால் கண்டனங்களை எதிர்நோக்கிய கிளின்ரன் நிர்வாகம் ஐக்கிய நாடுகள் சபை ஊடாக ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது.

கடந்த மே 8ஆம் திகதி ஐ.நா. பாதுகாப்புச்சபை கூடி ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்கள் பதவி விலகுவதற்கு மே 21ஆம் திகதிவரை காலக்கெடு விதித்தது.

மே 21 ஆம் திகதிக்கு முன் பதவி விலகாவிடில் ஹெய்ட்டி மீது புதிய தடைகளை அறிவிப்பதாகவும் ஐ.நா. பாதுகாப்புச் சபை தெரிவித்தது.

ஆனால் முன்னைய காலக்கெடுக்கள் போன்று 1994 மே 21 காலக் கெடுவும் எந்த வித மாற்றமும் இன்றிக் கழிந்து போனது.

### முன்னைய காலக் கெடுக்கள்

அமெரிக்க சமரச யோசனைக்கு அமைய 1993 ஜூன் மாதம் ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர்களின் பிரதிநிதிகள் அமெரிக்கா வந்து அரிஸ்ரைட்டுடன் பேச்சு நடத்தி இருந்தனர்.

அந்த சந்திப்பின் போது அதே ஆண்டு (1993) அக்டோபர் 30 ஆம் திகதி அரிஸ்ரைட்டிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கு இராணுவ ஆட்சியாளர் தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. செட்றாஸுக்கு மன்னிப்பு வழங்கவும் இணக்கம் காணப்பட்டது ஆனால் 1993 அக்டோபர் 30 காலக் கெடு ஆட்சி மாற்றத்துக்கான எதுவித அறிகுறியும் இன்றிக் கழிந்தது.

இதனை அடுத்து ஐ.நா பாதுகாப்புச் சபை ஹெய்ட்டி மீது எரிபொருள் ஆயுத தடைகளை விதித்தது.

ராணுவ ஆட்சியாளர் பதவி விலகி அரிஸ்ரைட்டிடம் ஆட்சியை ஒப்படைக்க 1994 ஜனவரி 15 ஆம் திகதிக்கு மற்றும் ஒரு புதிய காலக் கெடு விதிக்கப்பட்டது. இந்த காலக் கெடுவும் பலன் இன்றி கழிந்து போன பின்னரே 1994 மே 21 காலக் கெடு விதிக்கப்பட்டது.

### அமெரிக்க இராணுவத் தலையீடு எந்நேரமும் சாத்தியமாகலாம்

ஐ.நா விதித்த காலக் கெடுக்கள் இதுவரை பயன் அளிக்கத் தவறியதால் ஹெய்ட்டி ராணுவத் தலைவர்களுடன் தாம் இனி சமரச முயற்சியில் ஈடுபடப் போவதில்லை என அரிஸ்ரைட் அறிவித்துள்ளார். இது கிளின்ரன் நிர்வாகத்தை மேலும் இக்கட்டான நிலைக்குள் தள்ளி விட்டுள்ளது எனலாம். ஹெய்ட்டி மீது இராணுவத் தலையீட்டை விட வேறு வழி இல்லை என்ற நிலைப்பாட்டை கிளின்ரன் நிர்வாகத்துக்கு ஏற்படுத்தி விட்டது.

### படுகொலைகளால் நெருக்கடி

ஹெய்ட்டியின் கொனைவெஸ் நகரில் (Gonaives) சமீபத்தில் அரச படைகளினால் பொதுமக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவமும் கிளின்ரன் நிர்வாகத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது எனலாம்.

அதே சமயம் அமெரிக்கா சார்பாக ஹெய்ட்டி இராணுவத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்த, ஹெய்ட்டி தொடர்பான தனது ஆலோசகர் லோறன்ஸ் பெஸ்ஸுலோ (Lawrence Pezzullo) ராஜினாமாச் செய்ய வைக்கப்பட்டுள்ளார். சமரசத்துக்கான கதவுகள் அனேகமாக மூடப்பட்டு விட்டன.

பதவி விலகி அரிஸ்ரைட்டுக்கு விட்டுக் கொடுப்பதாக ராணுவத் தலைவர் செட்றாஸ் பல தடவைகள் அமெரிக்காவுக்கு வாக்குறுதிகளை வழங்கி இருந்தார்.

அவை எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டு விட்டன. பணிந்து போவதாக அமெரிக்காவுக்கும் வெளி உலகுக்கும் காட்டிக் கொண்டு ஹெய்ட்டியில் தனது ஆதிக்கத்தை மேலும் பலப்படுத்திக் கொண்டுள்ளார் செட்றாஸ்.

### புதிய ஜனாதிபதி

81 வயது நிரம்பிய உயர் நீதிமன்ற நீதியரசர் எமைல் ஜோனா செய்ன்ட் (Emile Jonassaint) கடந்த ஆண்டு புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டது. அதிகாரத்தை அரிஸ்ரைட்டுக்கு விட்டுக் கொடுக்கும் நிலையில் ஹெய்ட்டி இராணுவத் தலைவர்கள் இல்லை என்பதை அமெரிக்காவுக்கு தெளிவாக உணர்த்தி இருந்தது.

1989 ஆம் ஆண்டில் பனாமாவுக்கு அமெரிக்கா படையை அனுப்பியது ஒரு சில மணித்தியாலங்களில் பனாமா தலைவர் மனுவல் நொறேக்காவை (Manuel Noriega) கைது செய்து விடலாம் என்று அமெரிக்கா அப்போது கருதியது.

ஆனால் நினைத்தது நடந்து விடவில்லை.

நொறேக்காவைப் பிடிக்க அமெரிக்க படைகளுக்கு ஒரு வார காலம் சென்றது.

அதேபோன்று சோமாலியா சென்ற அமெரிக்கப் படைகள் மொஹமட் பரா அய்டீட்டை (Mohammed Farrah Aidid) கைப்பற்றும் முயற்சியில் வெற்றி பெறவில்லை. அமெரிக்க வீரர்களில் 18 பேரை இழக்க நேரிட்டது.

ஹெய்ட்டியிலும் 7000 பேரைக் கொண்ட ஹெய்ட்டி ராணுவத்தை அமெரிக்கப் படைகளினால் சுலபமாகத் தோற்கடித்துவிட முடியும். ஆனால் அரிஸ்ரைட் எதிர்ப்புச் சக்திகளை அடக்கி, அரிஸ்ரைட்டை மீண்டும் ஜனாதிபதி ஆக்கி, ஜனநாயக நடைமுறைகளை மீண்டும் அமுல் செய்வதற்கு அமெரிக்காவுக்கு நீண்ட காலம் எடுக்கும் என்றே நம்பப்படுகிறது.

அரிஸ்ரைட் ஜனாதிபதி ஆவதற்கு உதவிய சகல ஜனநாயக அமைப்புகளும் ஹெய்ட்டி ராணுவத் தலைவர்களினால் தற்போது அழிக்கப் பட்டு விட்டன.

கடந்த மூன்று வருட காலத்தில் தமக்கு சாதகமான அரசியல் நிலையை உருவாக்குவதில் ஹெய்ட்டி ராணுவத் தலைவர்கள் வெற்றிகண்டுள்ளனர்.

அமெரிக்கப்படைகள் வந்து அரிஸ்ரைட் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டாலும் அரிஸ்ரைட் எதிர்ப்பாளர்களின் ஆயுதங்களைக் களைவதில் அமெரிக்கப்படைகள் வெற்றி பெறுமா என்பதும் சந்தேகமே.

ஏற்கெனவே ராணுவத் தலைவர் செட்றாஸின் ஆதரவு இயக்கமான Fraph எனப்படும். (Front For The Advancement and Progress of Haiti இயக்கம் அரிஸ்ரைட் ஆதரவுச் சக்திகள் பூண்டோடு ஒழித்துக் கட்டுவதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளது. அரிஸ்ரைட் மீண்டும் பதவிக்கு வந்தால் இந்த இயக்கம் கொரில்லாப் போரை ஆரம்பிக்கும் சாத்தியம் இருந்து வருகின்றது. இந்த இயக்கத்துக்குப் பயந்து அரிஸ்ரைட் ஆதரவாளர்கள் தலைமறைவாகி விட்டனர்.

ஹெய்ட்டிக்கு அமெரிக்கப் படைகள் அனுப்பப்படுவதற்கு OAS எனப்படும் அமெரிக்க மாநிலங்களின் ஸ்தாபனம், மற்றும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் குடியரசுக் கொள்கை வகுக்கும் குழு ஆகியவை எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

அரிஸ்ரைட் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட வேண்டும் என்று கோரும் பிரான்ஸும் ஹெய்ட்டிக்கு அமெரிக்கா படைகளை அனுப்புவதை எதிர்த்து வருகிறது.

இன்றைய நிலையில் ஹெய்ட்டிக்கு அமெரிக்கா படைகளை அனுப்புமானால் அரிஸ்ரைட் பதவியில் இருக்கும் வரை அங்கு படைகளை வைத்திருக்க வேண்டிய கட்டாய நிலைமை அமெரிக்காவுக்கு ஏற்படும்; ★

### வெளி உலகம்

### சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பகம்

ஹெய்ட்டிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் துணிச்சல் இல்லை என்ற குற்றச்சாட்டுக்கள் ஆபிரிக்க—அமெரிக்க நலன்களில் அக்கறை உள்ள தரப்பினரால் கிளின்ரன் மீது சுமத்தப்பட்டன.

### ராணுவ தலையீட்டை நோக்கி ...

ஹெய்ட்டியின் இராணுவத் தலைவர்கள் உறுதிமொழிகளை மீறியதை அடுத்து கிளின்ரன் நிர்வாகம் இராணுவத் தலையீட்டை நோக்கி நகரும் அறிகுறிகள் தற்போது தென்படுகின்றன;

ஹெய்ட்டியில் இருந்துபடகுகள் மூலம் வரும் அகதிகள் இதுவரை விசாரணை எதுவும் இன்றியே உடனடியாக [illegible] அரசியல் தஞ்சம் அளிப்பது என அமெரிக்கா முடிவு செய்

கடந்த ஆண்டு ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்கள் தேர்தல்களை நடத்தி இருந்தனர். பெரும் ஊழல்கள் மத்தியில் நடந்த இத் தேர்தல்மூலம் அமைக்கப்பட்ட பொம்மை அரசாங்கமே புதிய ஜனாதிபதியாக எமைல் ஜோனா செய்ன்டை நியமித்தது.

பேர்ட்றண்ட் அரிஸ்ரைட் உரிய நேரத்தில் ஹெய்ட்டி திரும்புவதற்குத் தவறி இருந்ததால் அவரின் இடத்துக்கு புதிய ஜனாதிபதியை நியமிப்பதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

### படை எடுத்தால் என்ன நடக்கும்?

இந்த நிலையில் ஹெய்ட்டி மீது அமெரிக்கா படை எடுத்தால் அடுத்து என்ன நடக்கும் என்பதே முக்கிய கேள்வியாகும்.

— சஞ்சரன்

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் பவ வருடம் வைகாசி திங்கள் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை (10-06-1994)
காலை 6 மணி 19 நிமிடம் தொடங்கி 8 மணி 18 நிமிடம் வரையுள்ள
பூர்வபக்கத்து பிரதமை திதி சூலம் யோகம், மிருகசீரிடம்
நட்சத்திரம் மிதுன லக்கினம் பொருந்திய
சுப முகூர்த்த வேளையில்,

எங்கள் திருநிறை செல்வன்
**தயாபரன்**
B. Sc. Eng. (Hon) University of Peradeniya Engineer (Water Mains), Colombo Municipal Council
அவர்களை

எங்கள் திருநிறை செல்வி
**சுகந்தினி**
B. Com. University of Jaffna
அவர்களுக்கு

திருவருள் துணை கொண்டு வெள்ளவத்தை மயூரா பிளேஸ் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத் திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள்வதோடு, மதிய உணவு விருந்துபசாரத்திலும், கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

★ இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி மாணிக்கவாசகர்
குடும்பத்தினர்.
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
7/3A, அலெக்சாண்டர் வீதி,
வெள்ளவத்தை
கொழும்பு - 06
தொலைபேசி: 585987

திரு. திருமதி பாலசிங்கம்
குடும்பத்தினர்.
(M. B. சுவாம்பிள்ளை அன் கோ உரிமையாளர்)
17A, மெரீஸ் வீதி,
பம்பலப்பிட்டி
கொழும்பு - 04
தொலைபேசி: 50808

(இரு வீட்டார் அழைப்பு)
(பி-8319)

உ
சிவமயம்
கம்பர்மலை - வல்வெட்டி
வன்னிச்சி

## ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம்

நிகழும் சர்வ மங்கள பவ வருடம் வைகாசித் திங்கள் 22ஆம் நாள் இன்று (05-06-1994) ஞாயிறு காலை 6 மணி 11 நிமிடம் முதல் காலை 8 மணி 10 நிமிடம் வரையிலான அச்சுவினி நட்சத்திரமும் மிதுன லக்கினமும் கூடிய சுபவேளையில் வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தம்பப் பிள்ளையாருக்கும் கொடித் தம்பத்திற்கும் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் நடைபெற எம் பெருமாட்டியின் திருவருள் கைகூடியுள்ளது.

சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேக
பிரதம குரு
சிவஸ்ரீ சோம. தண்டபாணிக தேசிகர் (J.P)
(ஆலய பிரதம குருவும், பரிபாலன சபைத் தலைவரும்)

திருமதி கு. இராசமணி
(உபயகாரர்)

கம்பர்மலை,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.
(51850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 83 Sri Bajaj Scooter விற்பனைக்குண்டு. தொடர்பு: E. R. ஆசீர்வாதம், 41, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் (31256)

திருநெல்வேலிச் சந்தி மருத்துவபீடத்திற்கு மிக அண்மையில் வீடு கட்டுவதற்கேற்ற இரண்டு காணித்துண்டுகள் (பரப்பளவு 4½, 2) விற்பனைக்குண்டு. வியாபார ஸ்தலமாகவும் பாவிக்கலாம். திருமதி P. அம்பலவாணர், திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் Y. M. H. A. முன்பாக. [சி-8407]

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகில் ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு: இல 653, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (31254)

அல்சேஷன் ஆண், பெண் நாய்க்குட்டிகளும், பொமனேரியன் பெண் குட்டிகளும் விற்பனைக்குண்டு. நடராசா குலேந்திரன் வீதி, (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை), பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. (31234)

Broiler இறைச்சிக்கோழிகள் தினமும் காலை 7—11 மணி வரை குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [31259]

காசா மார்க்றெயில் [Fantail] புறாக்கள். தொடர்பு கொள்ளவும்: இல. 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [31242]

சாப்பாட்டு மேசை, அலுமாரி, கட்டில்கள், பியானோ, மீன்தொட்டி, அலுவலக மேசை ஆகியவை விற்பனைக்குண்டு. சி. நாதன், இல 16/3, சிதம்பரனார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். [31255]

யாழ். நாச்சிமார் கோயிலடியில் 2 பரப்பு காணி, கிணறு, மலசலகூடம், அத்திவாரத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. தர்மராஜா, 555/4, கே. கே. எஸ். வீதி, (மதவடி), யாழ்ப்பாணம். [31263]

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் முக்கால் பரப்பு நிலத்தில் முடிவடைந்த வீட்டுடன் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 654, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [31243]

### சேவல் குஞ்சு விற்பனை

2 கிழமை வளர்ச்சியடைந்த பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (31220)

### இறைச்சிக் கோழி

புறொயிலர், இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு தினங்களில் காலை 8-00 மணி முதல் 11-00 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும். (வெலிங்டன் சந்தி) 382, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். (31237

### தேவை

மாநகரசபை எல்லைக்குள் வீடுகள், காணிகள் தேவை. அத்துடன் வாடகைக்கும் வீடுகள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [31253]

### மணமகள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 36 வயது, பட்டதாரி ஆசிரியருக்கும், 34, 36 வயதுகளுடைய டாக்டர்களுக்கும், வயது 33 உடைய பட்டதாரி ஆசிரியைக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் [31252]

### போட்டிப் பரீட்சை

அரசாங்க சேவைகளுக்கான மேற்படி பரீட்சைக்கு Spoken English உடன் பொது உளச்சார்பு, பொது அறிவு, மொழித்திறன் கற்பிக்கப்படுகிறது. ஆரம்பம்: 07-06-94: V. N. Kandasamy A. I. B. Part-1 (London) Inter (London) Dip-in-English, 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்கு அருகில்) கொக்குவில். (31251)

### G. A. Q. அரசறிவியல்

ஜெயகாந்தனின் விடைகளுடன் விற்பனையாகிறது. விலை ரூபா 40/- யாழ். நகர் புத்தகசாலைகளில் கிடைக்கும். (7425

### O/L MATHS - 94

Distinction Credit பெறு பேறுடைய 15 வருடங்கள் விடைத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள B Sc ஆசிரியரால் (ஆண்டு 9, 10) கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோயிலடி, திருநெல்வேலி. [31260]

### O/L MATHS

ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறுடைய 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கோவேந்திரா வீதி, கண்டிக்குளி (7437]

### திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளலாம். டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், ஆறுகால்மடம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. தலைமையகம்: 284, ஸ்ராலின் வீதி, யாழ்ப்பாணம். (சி-8257)

### மிருதங்கம

தோல் வாத்தியங்கள் யாவும் ஒரு கிழமைக்குள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1, நாவலர் றோட், பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (31087)

### மணமகள் தேவை

41 வயதுடைய இந்து, திருவோண நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற, அரசாங்க ஸ்தாபனத்தில் தலைமை லிகிதராக கடமைபுரிபவருக்கு 35 வயதிற்குட்பட்ட ஆசிரிய தொழில்புரிபவர் விரும்பத்தக்கது. தொடர்பு: இல.652, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31165)

---

## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம்

## 11 - 06 - 1994

மு. ப. 8-00 — பரியோவான் தேவாலயத்தில் நற்கருணை ஆராதனை
மு. ப. 10-00 — வருடாந்த பொதுக்கூட்டமும், தேநீரும்
மு. ப 10-30 — மலிவு விற்பனை

பழைய மாணவர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— செயலாளர்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பழைய மாணவர் சங்கம். (சி-8390)

---

## முதலாவது
# பிறந்ததின வாழ்த்து



இரட்டைச் செல்வங்கள்

## ** சுஜீபன் சஜீபன் **

இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஜேர்மனியில் வசிக்கும் பன்னீர்செல்வம் - சாந்தினி தம்பதிகளின் இரட்டைச் செல்வங்கள் சுஜீபன் சஜீபன் தங்களது முதலாவது பிறந்த தினத்தை இன்று (05 - 06 - 1994) ஜேர்மனி இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.

இவர்களை ஜேர்மனியிலுள்ள அன்பு அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், ப்ரசாத், பிரசன்னா, தங்கை பிரவீனா, உதயன் மாமா, மாமி, மச்சான், ஜெயா சித்தப்பா, சதீஸ் சித்தி, இந்து அக்கா, தங்கை சிலோஜா, பிரான்ஸ் மோகன் மாமா, மாமி, டென் மார்க் ராஜன் சித்தப்பா, சித்தி, அக்கா, கனடா கண்ணன் சித்தப்பா, சுன்னாகம் அப்பப்பா, அப்பம்மா, அப்பன் சித்தப்பா, தவம் சித்தப்பா, ரூபன் சித்தப்பா இணுவில் அம்மப்பா, அம்மம்மா, வதனி சித்தி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சிவகாமி அம்மன் அருள் பெற்று சகல செல்வங்களுடனும் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

"பிருந்தாவனம்"
இணுவில் கிழக்கு.

---

## சிவயோக சமாஜ
## ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீ
(திருகோணமலை)

சுவாமியின் மாதாந்த பஜனை நல்லை ஆதீன மண்டபத்தில் 04-06-1994 காலை 8-00மணிக்கு கலாநிதி கனகராஜா தலைமையில் நடைபெற்றது. திரு. திருமதி எஸ். பரமலிங்கம் அவர்களால் மரம் நாட்டப்பட்டது. எல்லோருக்கும் குரு அருள் கிடைப்பதாக.

சிவயோக சமாஜ,
யாழ்ப்பாணக் கிளை.

(31261)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி கமலேஸ்வரி கனகரட்ணம்

தோற்றம்: 03 — 03 — 1958
மறைவு: 18 — 05 — 1993
திதி: 05 — 06 — 1994


ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டு ஒன்று போனாலும்
துணையாய் நின்ற எம் தாய்
சரிந்தகால் துயரத்தில் மூழ்கி
நித்தமும் கலங்குகிறோம் அம்மா!

கணவன், பிள்ளைகள்,
தாய், தந்தை,
சகோதரர்கள்.

கண்டிக்குளி. [31202]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் இளையதம்பி இராசரத்தினம்
(புத்தூர் விவசாயிகள் கழக முன்னாள் தலைவர்)

தோற்றம்: 05 — 03 — 1932
மறைவு: 06 — 05 — 1994

ஏர் செலுத்தி பத்தூரை ஆண்டீர்
ஊர் போற்றும் மக்களை ஈன்று உவந்தீர்-பின்பு
ஊர் போற்ற நியாயம் பேசி வென்றீர்
ஒரு வார நோயுடனே எம்மை பிரிந்தீர்

இன்று (05-06-1994) காலை எமது இல்லத்தில் நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். [31226]

---

சுவையான கேக்
தாமாகத் தயாரிக்க
மனையியல் ஆசிரியர்களின்
இன்றைய சிபார்சு




# றோயல் பேக்கிங் பவுடர்

சந்தைப்படுத்துவோர்:
## றோயல் இன்டஸ்ரீஸ்
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.
[சி-8398]

---

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு
## எழுதுநர் சேவை, பிற சேவைகள்
போட்டிப் பரீட்சைக்கான
## விசேட பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம்' **06 - 06 - 1994**
பிற்பகல் 3 மணி

பாட நெறி: மொழித்திறன்,
பொது விவேகம்,
பொது அறிவு.

★ 1½ மாத கால பயிற்சி நெறிகள்
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வகுப்புகள் - திங்கள், புதன், வெள்ளி
★ முழுப்பயிற்சிக்குமான கட்டணம் ரூபா 300/-

## அஸ்ரன் கல்வி நிலையம்
101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)
[சி-8252]

---

உ
தென்கோவை, இருபாலை
## கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்

கற்பகன் அடியார்களே!

தென்கோவை இருபாலை கற்பகப்பிள்ளையார் வருடாந்த மஹோற்சவம் இன்று 05-06-1994 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்தாவது நாள் இரதோற்சவமும், பதினாறாவது நாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் அடியார்கள் அனைவரும் உற்சவங்களில் கலந்து எம்பெருமானின் அனுக்கிரகத்தைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

05-06-94 ஞாயிறு கொடியேற்றம்
காலை 10மணிக்கு
19-06-94 ஞாயிறு இரதோற்சவம்
காலை 10மணிக்கு தேரில் சுவாமி ஆரோகணிப்பார்
20-06-94 திங்கள் தீர்த்தோற்சவம்
காலை10மணிக்கு புஸ்பக்கரணியில் தீர்த்தம் ஆடுதல்

இங்ஙனம்:
சு. பாலசுப்பிரமணிய தேசிகர்,
தி. பாஸ்கர மகாராசா ஐயா,
மேற்படி ஆலய பரிபாலகர்கள்.

கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்,
இருபாலை, கோப்பாய். (31270)

---

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
## ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(ஆசிரியை மங்கையர்கரசி வித்தியாலயம், நல்லூர்)

பிறப்பவர்கள் இறப்பது உண்மைதான் - இப்படி
மறைந்ததை எப்படித் தாங்குவோம்
அன்னாரின் மரணச் செய்தி கேட்டு
ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைந்தோம்
இவரது பிரிவால் துயருறும் "சிறி சேர்" இற்கும்
அவரது குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூற
வார்த்தை ஏதுமின்றித் தவிக்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

## "திரு வீடியோ விசன்"
கரணவாய்
[31266 ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
392/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## மாணவர் எழுச்சி நாள்

மாணவர்கள் எழுச்சி நாள் இன்று தமிழீழம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது:

ஒரு மாணவன் தன் மேம்பாட்டிலும் வளர்ச்சியிலும் தன்னைத் தயார் செய்யும் வகையிலும்—

சமுதாயத்தில் தனது கடமையை உணர்ந்து செயற்படும் வகையிலும்—

தனது இனத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் என்ன என்பதை முடிவு செய்யும் வகையிலும்—

சமுதாயப் புரட்சியில் தனது பங்கு என்ன என்பதை சிந்திக்கும் வகையிலும் ஜூன் 5 மாணவர் எழுச்சி நாளாக விடுதலைப் புலிகளால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது:

ஜூன் 5, மாணவர் பேரவையின் தலைவராக இருந்த தற்கொடையாளி பொன் சிவகுமாரனின் நினைவு தினம்.

சிவகுமாரனின் சேவையை மாணவர் சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும் அவர் ஆரம்பித்த பணிகளை மாணவர்கள் தொடர வேண்டும்.

சுயநல சிந்தனையும், துரோகத்தனங்களும் மலிந்திருந்த காலத்தில் தமிழ்த்தேசிய எழுச்சிக்கு உரமூட்டியவர் சிவகுமாரன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அடித்தளம் அமைப்பதில் அவர் அளப்பெரிய பங்காற்றினார்.

சுயநலமற்ற சிந்தனையுடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அவரினால் இடப்பட்ட அடித்தளத்தினால், இன்று தமிழீழம் ஒரு புதிய வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கிறது.

உறுதியும் வீரமும் நிறைந்த தாயக விடுதலைப் போராட்டம் இன்று நடத்தப்படுகிறது என்றால் அதற்கான களம் அமைத்தவர் சிவகுமாரனே.

ஆகவே மாணவர்கள் கல்வித்துறையுடன் மட்டும் நின்றுவிடாது தேசிய விடுதலையிலும் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.

தமிழீழ மாமனிதர்களையும்—

தமிழீழ கலைஞர்களையும்—

தமிழீழ வேளாண் மன்னர்களையும்— கௌரவித்து அவர்களுக்கு விருது வழங்கிய வர் தேசியத் தலைவர்.

அவர் தமிழீழ மாணவர்களுக்கும் பல ஊக்குவிப்புகளை வழங்கி உள்ளார். வேறு எந்தத் துறைக்கும் இல்லாதவாறு தமிழீழ மாணவர்களின் கல்வித் துறைக்கு தலைவரால் பெருமளவு நிதி செலவிடப்பட்டு வருகிறது.

தலைவரின் அபிலாசையின் படி நிறுவப்பட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்ட பொதுக்கல்வித் தேர்வில் முதல் இடத்தைப் பெற்ற மாணவர்கள் தலைவரினால் பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர் சமூகத்தின் வழிகாட்டிகளான ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஆசிரியர்களின் சேவை சமூகத்தினால் மேலும் மதிக்கப்படும் விதத்தில் உயர்த்தப்பட்டுள்ளது.

தற்போது மாணவர் எழுச்சி நாள் முதல் தடவையாக தமிழீழம் எங்கும் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

சிவகுமாரனின் நினைவு தினத்தில் மாணவர் எழுச்சி நாள் பிரகடனம் செய்யப்பட்டிருப்பது, அகில உலகத்துக்கும் முன்னுதாரணமாக வழிகாட்டி நிற்கும். தமிழீழத்தின் புதிய வரலாற்றில் மாணவர்கள் மீது பெரும் பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்பதையே அது உணர்த்துகின்றது.

மாணவர் எழுச்சி நாளின் நோக்கம் நமது தேசப்பணிகளிலே மாணவர்களையும் இணைத்துக்கொள்வது என்பதில் சந்தேகம் இல்லை.

"பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்பதற்கு இணங்க எமது மாணவர்கள் இலக்கணமாகத் திகழ வேண்டும்.

இளமை உணர்வையும், வேகத்தையும் நமது மாணவர்கள் செலவிடும்போது, அவர்கள் இந்த நாட்டின் உன்னதமான வளர்ச்சிக்கு ஊன்றுகோல் தரும் வீரர்கள் ஆகின்றனர்.

### ஆலயங்களில்

தென்கோவை இருபாலை ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஓ-17)

★ ★ ★

அராலி, ஜூன் 5

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான வருடாந்த நவகுண்ட சகஸ்கர மகா சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

நாளை திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு மகா சங்காபிஷேகம் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை 4 மணிக்கு அம்பாளுக்கு அதிவிசேட சிவசக்தி அருச்சனையும் இடம் பெறும். (ஓ-28)

### உணவு முத்திரை

தென்மராட்சி, ஜூன் 5

தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான ஏப்ரல் மாதத்திற்குரிய உணவு முத்திரை தென்மராட்சிப் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இவற்றிற்கான உலர் உணவுப் பொருள்களும் அந்தந்தப் பிரிவு ப. நோ. கூ. சங்கங்களின் கடைகளில் தற்பொழுது விநியோகிக்கப்படுகின்றன. (ஓ-117)

# தேர்தலில் போட்டியிடுவது கட்சித்தலைவரின் கையில்

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் வேட்பாளராகத் தாம் போட்டியிடுவதா என்பது பற்றி தமது கட்சியும் தாயாருமே தீர்மானிக்க வேண்டும் என்று திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையே நிறுத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது தெரிந்ததே.

எனினும் — சந்திரிகாவையே நிறுத்த வேண்டும் என்று கட்சியில் ஒரு பிரிவினர் இன்னும் தலைமைப் பீடத்தை வற்புறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் — சந்திரிகா கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் — "கட்சியும் கட்சித் தலைவருமான எனது தாயாரும் நான் போட்டியிட வேண்டும் என்று தீர்மானிப்பின் அதுபற்றி யோசிக்கலாம்" — என்று கூறியிருக்கிறார்.

சிறந்த பொருளாதாரக் கொள்கையையே தாம் கடைப்பிடிக்கப் போவதாகவும் — பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இடம்பெற்றுள்ள இடதுசாரிக் கட்சிகள் ஒரு பிரச்சினையாக அதற்கு இருக்க மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். (எ)

## மாணவர் எழுச்சி நாள்: இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழீழம் பிரகடனப்படுத்தியுள்ள மாணவர் எழுச்சி நாள் இன்றாகும். இத்தினத்தை ஒட்டி இன்று கோட்டரீதியாக பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

கோட்டரீதியாக எழுச்சி நாள் இடம்பெறும் பாடசாலைகள் வருமாறு:-

யாழ்ப்பாண கல்விக் கோட்டம்: யாழ். மத்திய கல்லூரி.

நல்லூர் கல்விக் கோட்டம்; யாழ் இந்து. மகளிர் கல்லூரி

தென்மராட்சி கல்விக் கோட்டம்; சாவகச்சேரி இந்துக் கல்லூரி

பருத்தித்துறைக் கல்விக் கோட்டம்; மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

சாவெட்டி கல்விக் கோட்டம்; நெல்லியடி ம. ம. வி

கோப்பாய் கல்விக் கோட்டம்; கிறிஸ்தவக்கல்லூரி

தெல்லிப்பழை கல்விக் கோட்டம்; மகாஜனக் கல்லூரி.

வேலணை, ஊர்காவற்றுறை கல்விக் கோட்டங்கள்; சண்டிக்குளி சென் ஜோன்ஸ் அக்கடமி. (ஓ-11-31-117-173)

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

கலை வடக இணையத்தின் முதலாவது விசேட பொதுச் சபைக் கூட்டம் இன்று (ஞாயிறு) காலை 9.30 மணிக்கு யாழ் இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இதில் யாழ் மாவட்டத்தில் உள்ள வீடியோபடப்பிடிப்பாளர்கள் வீடியோ நாடா விநியோகஸ்தர்கள் புகைப்படத்துறையினர், தொழில்நுட்ப சேவையாளர்கள் (ரீவி —டெக், ஜெனரேற்றர்) தொழில் செய்வோர்) அனைவரும் கலந்து கொள்கிறார்கள். (ஓ-எ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 5

சர்வதேச சென் ஜோன் அம்புலன்ஸ் தினத்தை முன்விட்டு யாழ்.பிரதேச சென் ஜோன் அம்புலன்ஸ் சங்கமும் படையும் இன்று ஞாயிறு முதல் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை கொடிவாரம் ஒன்றை நடத்தவுள்ளன.

இதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஓ)

★ ★ ★

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்விட்டு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர் மன்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு "புதுமை" எனும் நூலை வெளியிடுகின்றது. வெளியீட்டு விழா அதிபர் திரு. எஸ். முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெறும். (க-155)

★ ★ ★

மாணவர் எழுச்சி வாரத்தை முன்விட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் "உணர்வு" என்ற கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு விழா அதிபர் திரு. கே. பொன்னையாதலைமையில் நடைபெறும். (ஓ-173)

★ ★ ★

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மாணவர் எழுச்சிநாள் நிகழ்ச்சியில் இன்று முற்பகல் 'மாணவர் எதிர் நோக்கும் தாக்கங்கள்' என்னும் விடயம் குறித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா சிறப்பு உரை ஆற்றுவார். (ஓ)

### சேவாச்சிரம பணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சுவாமி விவேகானந்தரின் உலக சமயப் பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் மனிதநேயம் பற்றிய கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் விவேகானந்தர் பற்றிய செய்திப்படமும் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் சமய சம்பந்தமான வீடியோப் படமும் காண்பிக்கப்படும்.

அத்துடன் 17 ஆம் திகதி அன்று சுவாமி சித்ருபானந்தா கைதடி வயோதிபர் இல்லத்துக்குச் சென்று அன்பளிப்புகளை வழங்குவார். (க)

### மாணவருக்கு பயிற்சி

வடமராட்சி, ஜூன் 5

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவில் பிரதி சனிக்கிழமை தோறும் பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை நடைபெற்று வருகிறது.

## பளை கல்விப் பிராந்தியம்:

## 46 ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

தென்மராட்சி, ஜூன் 5

பளை கல்விப் பிராந்திய பாடசாலைகளில் பயிலுநர் ஆசிரியர்களாக கடமையாற்றும் 46 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது:

நிரந்தர நியமனம் பெறும் பயிலுநர் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் பளை பிராந்திய கல்வி நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 5ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடத்தப்படும் மென்பந்து கிறிக்கெட் சுற்றுப்போட்டி தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் ஆடும் அணிகள் வருமாறு:-

★ காலை 10மணி: தொய்யாத்தோட்டம் வி.க அணி எதிர் கொக்குவில் மேற்கு சனமூக நிலைய அணி

★ பி. ப. 1 மணி: வைக்கிளஸ்பி வி. க. அணி எதிர் தபாலக வி. க அணி.

★ பி.ப .2.30 மணி: திருவள்ளுவர் வி. க அணி எதிர் அரியாலை டி. ஆர்.சி.சி. வி. க. அணி.

★ பி ப. 3.30 மணி: வளன்புரம் வி.க. அணி எதிர் மணிப்புரி வி.க. அணி. (ஓ-17)

## சூழலைப் பாதுகாக்க உறுதி பூணுவோம்

நாம் எமது வீட்டை அழகுபடுத்துகிறோம் தூய்மையாக வைத்திருக்கிறோம், ஆனால் எமது பெரிய வீடான பூமியை பற்றிச் சிந்திக்கிறோமா? நாமெல்லாம் பூமித்தாயின் பிள்ளைகள் அல்லவா?

பூமி என்ற கிரகத்தைப் பாதுகாக்க ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயற்கைத்தாய் கட்டியெழுப்பிய அமைப்பு சிதைக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பம் என்ற போர்வையில் மனிதனின் நடவடிக்கைகள் இயற்கையின் அத்திவாரத்தை தகர்த்துள்ளது:

இயற்கைக்கும் சமூகத்திற்கும் இடையிலுள்ள உறவு குழப்பப்பட்டுள்ளது. உலகம் ஆழமான சூழல் நெருக்கடியில் சிக்கியிருக்கின்றது.

இதனால் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு ஜூன் 05 ஆம் நாள் அகில உலகமும் உலக சுற்றாடல் தினமாகக் கருதப்படுகின்றது. இவ்விழிப்புணர்ச்சி அதிகரிப்புப் பணியில் மனித குலத்திற்கு பெரும் கவலை தரும் சுற்றுச் சூழல் பாதிப்புகள் வெளிப்படையாகத் தெரிகின்றன.

இவற்றில் ஓசோன் படலங்களின் தேய்மானம், பூமி சூடாதல், அமிலமழை, காடு அழித்தல், நீர்நிலைகள் மாசடைதல், வேளாண்மை நிலங்கள் வளம் குறைதல் என்பன முன்னணியாக உள்ளன.

மனித குலம் அறிந்திருந்த வரலாற்றிலேயே மிகவெப்பமான வருடம் 1990 ஆகக்கருதப்படுகின்றது. பூமி வெப்பமாகும் பிரச்சினையால் மழை அளவிலும் நீர் நிலைகளின் சூழல் அமைப்பிலும் மாற்றம் ஏற்படுவதற்கும் வெள்ளப் பெருக்கு, புயல், சூறாவளி போன்றவை அதிகரிப்பதற்கும் காரணமாகின்றது.

மண் அரிப்பினால் வருடம் தோறும் உலகின் 2கோடி ஹெக்டயர் வேளாண் நிலம் நாசமாகின்றன. வருடத்திற்கு 60 இலட்சம் ஹெக்டயர் என்ற அளவில் பாலைவனம் விரிந்து வருகின்றது.

எமது பிரதேசங்களை பொறுத்த மட்டில் மரங்களைக் கண்டபடி தறிப்பதே முக்கிய சூழல் பாதுகாப்பும் பிரச்சினையாகும்.

சூழல் பாதுகாப்புத் தொடர்பான சகல பிரச்சினைக்கும் தீர்வு கூடுதலான நிலத்தை மூடி மரங்களை வளர்ப்பதாகத்தான் இருக்கமுடியும்.

சூழல் பற்றிய அறிவும் அக்கறையும் அனைவருக்கும் அவசியமானது. உலக சுற்றாடல் தினத்தில் மரநடுகைக்காக திடசங்கற்பம் செய்வோம்.

தகவல்;
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

**தலைவன் பின்னால் அணி திரள்வோம் தடைகள் வரினும் களம் புகுவோம்**

## ராஜீவ் காந்தி வழக்கு பகிரங்கமாக நடக்கும்

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, ஜூன் 5

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையை பூந்தமல்லியில் உள்ள நீதிமன்றத்தில் பகிரங்கமாக — திறந்த நீதிமன்ற விசாரணையாக — நடத்தவேண்டும் எனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட உத்தரவு மனுவை சென்னை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

மேற்படி மனுவை சந்தேக நபர்களில் ஒருவரான பேரறிவாளனின் தந்தையான குயில்தாசன் தாக்கல் செய்திருந்தார். (இ-5)

### தும்புத் தொழிற்சாலை

யாழ்ப்பாணம், ஜூன் 5

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ் கிளை அரியாலையில் தும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைத்துள்ளது இந்தத் தும்பு தொழிற்சாலை இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளை தலைவர் வைத்திய கலாநிதி த. சிங்கராஜா வால் திறந்து வைக்கப்பட்டது. (க-17)

### புலிகளின் குரல் வானொலியில்

05 - 06 - 1994
ஞாயிறு இரவு

★ 8. 01— தியாகி சிவகுமாரன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "இலட்சிய வேங்கை தியாகி சிவகுமாரன்"

★ 8.10 — உலக சுற்றாடல் தினத்தை யொட்டி சிறப்பு நிகழ்ச்சி "சூழல் பேணுவோம்"

★ 8. 20 — மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி "விடுதலைக்கு வேட்கை கொண்டனம்"

★ 8. 30 — செய்திகள்

★ 8. 40 — தொடர் நாடகம் - "இலட்சியம்" —26 ஆம் அங்கம்

06 - 06 - 1994
திங்கள் காலை

★ 7. 03 — மாவீரவணக்கம்

★ 7. 15 — மணியாரம்

★ 7. 30 — செய்திகள்

★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7. 40 — தாயகப்பாடல்கள்.

### சிகிச்சைக்கு சென்றவர் பாம்புக்கு பலி

யாழ்ப்பாணம், ஜூன் 5

தனியார் மருத்துவமனை ஒன்றில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவர் அங்கு பாம்பு கடித்து மரணமானார்:

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டுப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் நிகழ்ந்தது.

ஓட்டுமடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி குமாரசாமி (வயது 45) என்பவரே மரணமானவர் ஆவார்.

பாம்பினால் கடியுண்டவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு அனுமதிக்கப்பட்ட பின் அங்கு மரணமானார். (இ-15)

### குப்பிவிளக்கு தீப்பிடித்து மாணவி மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

குப்பிவிளக்கு தட்டுப்பட்டு தீப்பற்றி எரிந்து படுகாயமடைந்த நிலையில் கடந்த மூன்றாம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மாணவி நேற்று அங்கு மரணமானார்:

இரவுவேளை வீட்டில் படித்துக் கொண்டிருந்த வேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

அக்கராயன் குளத்தில் கடந்த 30 ஆம் திகதி இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த நடராசா திருபா (வயது 15) என்பவரே மரணமானவராவார். (இ-15)

### ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

பலாலி இராணுவமுகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு வலிகாமம் வடக்குப் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (இ-15)

## சுவாமி விவேகானந்தர் ஏழையில் சிவனைக்கண்டார்

### சிகாகோ பிரசங்க விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 5

"சுவாமி விவேகானந்தர் ஏழைகளிடத்தில் சிவனைக் கண்டார். பசித்தவனுக்கு முதலில் உணவு ஊட்டாமல் அவனுக்கு ஆத்மீகம் போதிப்பதில் எவ்வித பயனும் இல்லை என்று கூறினார்"

திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயம் நடத்திய சுவாமி விவேகானந்தரின் சிகாகோ பிரசங்க நூற்றாண்டு விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய யாழ் வணிகசங்கத் தலைவர் திரு. வே சிற்சபேசன் இவ்வாறு கூறினார்.

ராமகிருஷ்ணாலய இயக்குநர் திரு. ராஜா மகேந்திரசிங்கம் இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

திரு. சிற்சபேசன் தமது உரையில் மேலும் கூறியதாவது:

"இப்பொழுது வேண்டியது அழுகைக் கண்ணீரல்ல வீரமே என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் மக்களைச் சென்றடைய வேண்டும்"—என்றார்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், ஆசிரியமணிதிரு. ஆர். சி. சுப்பிரமணியம்' யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. எம். வேதநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

யாழ் பல்கலைக் கழக' ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்களுக்கிடையேயான ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் வெற்றியாளர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்களையும் விழா கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களையும் திரு. வே பொ பாலசிங்கம் வழங்கினார்.

தொடர்ந்து ராமகிருஷ்ணாலய மாணவிகள் நடத்திய "வீரத்துறவி" வில்லிசையும், கலாநிதி காரை எம் பி. அருளானந்தம் தலைமையில் "மானுடத்தை நேசித்த மகாஞானி" என்ற தலைப்பிலான கவியரங்கமும் திருநெல்வேலி நுண்கலைக் கோயில் மாணவிகளின் நடன நிகழ்ச்சியும் திரு. வ. கே. பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வர இசையும் இடம் பெற்றன (க)

# சிந்தனை நன்றாக இருந்தால் வாழ்வும் நன்றாக அமையும்

## சாவகச்சேரி விவேகானந்தர் விழாவில் உரை

சாவகச்சேரி ஜூன் 5

சுவாமி விவேகானந்தரின் போதனைகள், வரலாறுகள் எல்லோருக்கும் வாழ்வில் தேவையானவை ஆகும். ஒவ்வொருவருடைய சிந்தனையும் நன்றாக அமையும் போது வாழ்வும் நன்றாக அமைகிறது. சிந்தனை தெளிவடைந்தால் அருள் உள்ளவருக்கு அருள் கொடுப்பதாக அமையும். மனிதன் தெய்வமாக மாறலாம் எனவே எமக்கு வழி காட்டி நிற்கின்ற விவேகானந்தரின் போதனைகளை நாம் வாழ்நாளில் பின்பற்ற வேண்டும்.

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் உலக சமயப் பெருவிழாவில் உரை நிகழ்த்திய சாவகச்சேரி பிரதேச செயலர் திரு.பு. சுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் செல்வி இ. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற ... தேச செயலர் மேலும் பேசுகையில் ...

கி. மு. 2000 ஆண்டில் வாழ்ந்த தமிழர்கள் எமது இனிய முத்தமிழுக்கு பல அளப்பரிய தொண்டுகளைச் செய்தார்கள்.

அவ்வாறே ஆன்மீகத்திற்கும் தொண்டுகளைச் செய்தார்கள்.

அதே போல தமிழ் இளைஞர்களும் தங்கள் தமிழ்த் தாய் நாட்டுக்கும் சேவைகள் செய்யத் தம்மை அர்ப்பணிப்பவர்களாக மாற வேண்டும் என்றார்.

சாவகச்சேரி நகரசபை முன்னாள் செயலாளர் த. நவரத்தினராசா பேசுகையில் ஒழுக்கம், ஆன்மீகத்திற்கு முன்னுதாரணமாக அமைகின்றது. ஒவ்வொருவரும் தம்மை நெறிப்படுத்தி ஒழுக்கசீலராக மாற வேண்டும். அப்போதுதான்சமுதாயம் சீரானதாக அமையும்.

நாம் ஏழை மக்களுக்கு உதவிபுரிதல் வேண்டும் அந்த உதவியினால் அந்த ஏழைகள் அடையும் இன்பத்தை கண்டு நாம் சந்தோசமடைதல் வேண்டும். இவ்வாறாக சுவாமி விவேகானந்தரும் ஏழைகளுக்கு தொண்டுகள் பல புரிந்து இன்பம் கண்டார் என்றார்.

இந் நிகழ்வில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா அவர்களால் சாவகச்சேரி கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கும் சாவகச்சேரி நகரசபைசெயலாளருக்கும் சுவாமி விவேகானந்தரின் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (இ-31)

**பெண்ணிடம் கறக்கும் சீதனம் முதுகெலும்பற்றவனுக்கு மூலதனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் எழுச்சி நாள்

மாணவர் எழுச்சி
மானுட மாண்பினை உயர்த்தட்டும்;

சேர், வை. து. ம ம வி.
வேலணை

(31276)



## முகவர்கள் தேவை

தமிழீழத்தின் பிரபல சஞ்சிகையான "உலக உலா"வை விநியோகம் செய்ய வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளிற்கு விநியோக முகவர்கள் தேவைப்படுகின்றனர். தகுதி வாய்ந்தவர்கள் எதிர்வரும் 10-06-94 அன்று காலை 9-00மணிக்கு இராசன் அச்சகம், 144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

இராசன் அச்சகம்,
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(31264)



## ஐங்கரன் விளையாட்டு கழகம்
நடத்தும்
## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும்

இடம்;- ஐங்கரன் விளையாட்டு மைதானம் (O. L. R. தேவாலய அருகில்)
காலம்:- 05 - 06 - 94 ஞாயிற்றுக் கிழமை
மாலை 6. 30 மணி (மின்னொளியில் நடைபெறும்)

தலைவர்:
திரு. க. நித்தியானந்தன்
(யாழ். நகர் கிராம சேவையாளர்)

பிரதம விருந்தினர்:
திரு. திருமதி. கலாநிதி க குணராசா
(யாழ். பிரதேச செயலாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. பாலசிங்கம்
(யாழ். மாநகர சபை ஆணையாளர்)
திரு. திருமதி. சிவபாலன்
(மகப்பேற்று வைத்திய கலாநிதி
யாழ். போதனா வைத்தியசாலை)
திரு. அருணகிரிராஜா
(உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. முருகநேசன்
(செயலாளர் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு)
செல்வன். செந்தமிழன்
(யாழ். வட்டப் பொறுப்பாளர்)
கரப்பந்தாட்ட (SETUP)

இறுதியாட்டத்தில் பங்குபற்றும் கழகங்கள்
அரியாலை ஐ வி க: எதிர் அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க.

வெற்றி பெற்ற கழகங்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
விளையாட்டு நிர்வாகக் குழு.
யாழ். நகர் ஐங்கரன் விளையாட்டு கழகம்.

விளம்பர அன்பளிப்பு:-
புதிய இரெட்ணம் மருந்தகம்
392, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

(31275)


## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு நாகராசா

சரவணையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது இராமநாதன் ஒழுங்கை கோப்பாய் தெற்கில் வசித்தவருமாகிய கார்த்திகேசு நாகராசா நேற்று (4-6-94) காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று பி ப. 2-30 மணிக்கு நடைபெற்று கோண்டாவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உதயகுமார் (வின்சன்)
(மகன்)

இராமநாதன் ஒழுங்கை,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு.

(31277)

### திருமதி ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியை, மங்கையர்க்கரசி வித்தியாலயம், நல்லூர்) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கா. நல்லையா (மலேசியன் பென்சனர்), கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மகளும், இணுவிலைச் சேர்ந்த ஆறுமுகம் - சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியர்கள்) ஆகியோரின் அன்பு மருமகளும், ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) அன்பு மனைவியும், திருமதி சிவகாமி சிவசுப்பிரமணியத்தின் (கனடா) அன்பு அக்காவும், குகமூர்த்தி, திருமுருகன், குகுமாரி, விஜயரகுநாதன், கோமேஸ்வரி, இராமச்சந்திரன், விக்னேஸ்வரி, நரேந்திரா, கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை (6 - 6 - 94) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆறு திருமுருகன்
(மைத்துனன்)

'அம்பாள்' அகம்',
மருதனார்மடம்,
இணுவில்.

(சி/8397)

# வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுத்திட்டம் எம்மிடம் உண்டு

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 5

வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு தீர்வு ஒன்றை நாம் ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம். இத்தீர்வு ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் வடக்கு - கிழக்கில் தேர்தல்களை நடத்தி அங்குள்ள மக்கள் தங்களுக்குச் சொந்தமாக மாகாண நிர்வாகம் அமைக்க நாம் வழிசெய்வோம்.

ஜனாதிபதி விஜேதுங்கா பதுளையில் நடந்த மாவட்ட ஐ.தே.க மாநாட்டில் பேசிய போது முன்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு-கிழக்கு நெருக்கடிக்கு ஐக்கிய தேசியக் கட்சியிடம் தீர்வு உண்டு. எமதுஇராணுவ இரகசியங்களை பகிரங்கப்படுத்த முடியாது.

இரண்டாவது உலக யுத்தத்தில் நேசஅணியின் சார்பில் வெற்றியீட்டிய சேர் வின்ஸ்டன் சேர்ச்சில் சுவருக்குக் காதுகள் உள்ளன என்று கூறினார்.

இரு மாகாணங்களை இணைப்பதா, இணைப்பை ரத்துச்செய்வதா என்பது பற்றிய கருத்துக்கணிப்பை நடத்தவும் நாம் திட்டமிட்டுள்ளோம்.

ஜனநாயக, சமாதான வழிகளில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நாம் தயாராக உள்ளோம்.

சமாதான வழிகளை நிராகரிப்பவர்களுக்கு, எமது படைகள் தயாரான நிலையில் இருப்பதை நினைவூட்ட விரும்புகின்றேன்,, என்றும் அவர் கூறினார்.

(இ-எ)

## தினமும் 700 குழந்தைகள் பிறக்கின்றன

கொழும்பு, ஜூன் 5

இலங்கையின் சனத்தொகை வருடமொன்றுக்கு இரண்டரை லட்சத்தால் அதிகரிக்கிறது. நாட்டில் நாள்தோறும் எழுநூறு குழந்தைகள் பிறக்கின்றன.

தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் எம். எல். எம். அபுசாலி இத்தகவலை தெரிவித்துள்ளார்.

(இ-5)

## சிறிசேன....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. சிறிசேன கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துத் தமது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்தார். அப்போது அமைச்சர் ஜோன் அமரதுங்கா ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா ஆகியோர் இருந்தனர்.

(இ-எ)

## தமிழ் மாணவர் தமது..:

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணாக்கர்களது பங்களிப்பின்றி உலகில் விடுதலைப் போராட்டங்கள், புரட்சிகள் மாற்றங்கள் ஏற்பட்டதாக வரலாறில்லை;

### அரசின் திட்டமிட்ட செயல்

எமது சமுதாய ஏற்றத்தின் தூண்களாக விளங்கப் போகின்ற தமிழீழ மாணவர்களின் அடித்தளத்தையே தகர்த்து வலுவிழக்கச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு சிங்கள அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

★ தமிழ் மாணவர்களின் உயர்கல்வியை மட்டுப்படுத்திய தரப்படுத்தல்.

★ காலந்தாழ்த்தி வழங்கப்பட்டுவரும் இலவசப் பாடநூல்கள்.

★ தமிழ்மாணவர்களது தன்னம்பிக்கையையும், விடுதலை உணர்வையும் மழுங்கடிக்கும் வகையில் உண்மைக்குப் புறம்பாக, தமிழர் வரலாற்றுப் பெருமைகளை மூடி மறைத்து சிங்களவர் வரலாற்றை மிகைப்படுத்திய பாடநூல்கள்.

★ நிதி ஒதுக்கீடுகளில் தொடர்ந்து வரும், தமிழ்ப் பகுதிக்கான புறக்கணிப்புகள்.

★ ஆசிரியர் அமைத்தல்களில் (நியமனங்கள்), பாடசாலை உபகரணங்கள் வழங்குவதில் தமிழ்ப் பகுதிகளிற்கு காட்டிவரும் ஏற்றத்தாழ்வுகள்.

★ தற்போதைய பொருளாதாரத் தடையினால் மாணவர்களின் கற்கைக்குத் தேவையான கொப்பி, எழுதுதாள், எழுதுகோல் போன்றவை கிடைக்காமை.

★ பாடசாலைக்கு வேண்டிய கரும்பலகை, மை, வெண்கட்டிகள், தேர்வுகளுக்கு வேண்டிய எழுதுதாள்கள், கல்லச்சுத்தாள், கல்லச்சுமை, ஸ்ரென்சில் போன்றவற்றுக்கான தடை.

★ மாணவர்கள் அறிவியற் பாடங்களை எளிதாக புரிந்து கொள்வதற்காக வீடியோ கசட்டுக்கள், நூல்கள், உபகரணங்களுக்குத் தொடர்ந்து வரும் தடை.

★ தமிழ்ப் பகுதிப் பாடசாலைகளுக்கான கட்டடப் பணி முற்றாக நிறுத்தப்பட்டதோடு மட்டுமின்றி கண்மூடித்தனமான குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதலினால் ஏற்கனவே இருந்து வரும் கட்டடங்களும் அழிக்கப்படுகன.

★ மாணவர்கள் வீட்டில் கற்பதற்குத் தேவையான மின்சாரம், எரிபொருள் இன்மை.

★ பாடசாலை செல்வதற்கான போக்குவரத்து வாய்ப்புக்கள் (வசதிகள்) இல்லாததோடு, மிதிவண்டிகளுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள தட்டுப்பாடு.

★ மாணவர்களுக்கான ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் அறவே நிறுத்தப்பட்டமை

★ உரிய காலங்களில் பொதுத் தேர்வுகள், செயன்முறைத் தேர்வுகளை நடத்தாது இழுத்தடிப்பது.

★ தேர்வு காலங்களில் திட்டமிட்ட முறையில் பாடசாலைகள் மீதும் பாடசாலைச் சுற்றாடலிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் வான் தாக்குதல்கள்.

இவை போன்ற எண்ணிலடங்காத இடர்களும் தடைகளும் தமிழீழ மாணவர்களின் எதிர்காலத்தையே அழித்துச் சிதைப்பதற்காகச் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மாணவர் உயிருக்கு உறுதியில்லை

அதுமட்டுமின்றி, தமிழ் மாணவர்களின் உயிருக்கும் உறுதி கூறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மைக் காலக் குண்டு வீச்சினால் பாடசாலைகளுக்குச் செல்லும் வழிகளிலும் வீடுகளிலும் என பல மாணவர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். தமிழீழ மாணவர்கள் கல்வி கற்பதற்கு மட்டுமன்றி உயிர் வாழ்வதற்கே போராட வேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்கள்.

மாணவர்களுக்கெதிரான சிங்களப் பேரினவாதிகளின் இந்தச் செயற்பாடுகள் தமிழினத்தின் அடித்தளத்தையே அழிக்குந்தொழிலாகும் நடவடிக்கையேயாகும்.

ஆயினும் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையேயும் இடர்கள் தடைகளை எதிர்கொண்டுதான் எமது மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்கின்றார்கள்.

### தலைவரின் அக்கறை

கல்வியின் இன்றியமையாமையை நன்குணர்ந்தமையாற்றான் எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், விடுதலைப் போராட்டத்திற்குப் போராளிகள் போதாத நிலையிலும் பல போராளிகளைக் கொண்டு கல்விக்கழகம் என்றும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு என்றும், சமூக மேம்பாட்டுப் பிரிவு என்றும் கல்வியை மேம்படுத்துவதற்கு பல அமைப்புக்களை ஏற்படுத்தி தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்வித் தடைகளைத் தகர்த்தெறிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றார்.

தமிழீழத்தில் எதிர் காலத்தில் கல்வியற்றவர்கள் எவரும் இருக்கக் கூடாதென்பதற்காக தாய் தந்தையரை இழந்து, குடியிருந்த வீடுகள் உடைமைகளை இழந்து கல்வியைத் தொடங்கவோ தொடரவோ வாய்ப்பற்றிருக்கும் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பை ஏற்படுத்த பல அமைப்புக்களை ஏற்படுத்தி வருகின்றார்.

விடுதலைப் போராட்டங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகள் நடைபெறும் இடங்களிலெல்லாம் மாணவர் தம் கல்வி தடைப்படுவது இயல்பானதே. ஆயினும் தமிழீழத்தைப் பொறுத்தவரை விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்று உலகின் பார்வையைப் பெறும் உச்ச நிலையை அடைந்திருக்கும் போதும் தலைவரது வழிகாட்டுதலுடன் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்த பல அமைப்புக்களை ஏற்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

### கல்வியே அரசியல் ஆக்கப்பட்டது

"மாணவர்கள் அரசியலைத் தெரிந்து வைத்திருந்தால் போதுமானது; அரசியலில் ஈடுபடுவது தேவையற்றது" என்பது இயல்பான நிலைமைகளில் உலகம் முழுவதிலும் இருக்கும் மாணவர்களுக்குப் பொருத்தமான கருத்தாகும்.

ஆயினும், தமிழீழத்தைப் பொறுத்தவரை மாணவர்களது கல்வியே அரசியலாக்கப்பட்டுள்ளது. தமிழ் மாணவர்களது கல்வித் தகைமை வளர்ச்சியடைய விடாது தடுக்கப்படுவது மட்டுமன்றி, கல்வித் தகைமையைத் தாழ்த்தி அழித்துவிடும் நோக்கோடு திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கையில் இறங்கி, சிங்கள அரசே தமிழ் மாணவர்களது கல்வியை அரசியலாக்கும் போது, தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கும் வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் எழுச்சியுடன் போராடியே ஆகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போராட்ட சூழலில் இருந்து கொண்டு, தம்கெதிரான தடைகளையும் இடர்களையும் எதிர்கொண்டுவரும் தமிழீழ மாணவர்கள், தமது இனம், மொழி, நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நிலையில் அந்நெருக்கடிகளை தகர்த்தெறிவதற்கான விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அப்போராட்டத்துக்குத் துணையாக தம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டியது மாணவர்களது தலையான கடமையாகும். ஏனெனில் எதிர்காலம் மாணவர் சமுதாயத்தினுடையதே. இன்று நாம் எதிர்நோக்கும் தாக்கங்களையோ விடுதலையின் விளைவுகளையோ நாளை ஏற்க இருப்பவர்கள் இன்றைய இளைஞர்களும் மாணவர்களுமே

### முழு மனிதராகவேண்டும்

மாணவர் எழுச்சி நாளைக் கொண்டாடுகின்ற இன்றைய நாளில், மாணவர்கள் சமுதாயத்திற்கு பயன்படத்தக்க வகையில் சமுதாயம் போற்றுகின்ற வகையில் முழுமையான மனிதர்களாக ஆகவேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் இனப்பற்றும் மிக்கவர்களாக இருப்பதுடன் பாடசாலைப் பற்றும் கொண்டவர்களாக மாணவர்கள் திகழ வேண்டும். பாடசாலையின் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் உரிய மதிப்பை வழங்கவேண்டும்.

வகுப்பறைக் கல்வியில் ஆர்வத்தோடும் அக்கறையோடும் ஈடுபட்டு ஆற்றலையும் திறமையையும் பெறுவதோடு உலக அறிவையும், கலை இலக்கியம், உடற்பயிற்சி போன்ற புறநிலைக்கல்வியையும் நிறைவாகப் பெற்று, பொதுநலப் பணிகளில் ஈடுபாடு கொண்ட முழு மனிதர்களாக ஆகவேண்டும் என மாணவரமைப்பு வாழ்த்துவதோடு, தமிழீழ மாணவர்களது கல்வி நிலையை மேம்படுத்துதலிலும் அவர்களுக்குத் தோள்கொடுக்கும் தோழமை அமைப்பாகச் செயற்படும் என்றும் உறுதி கூறுகின்றோம்.—என்று அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம்மால் செய்து கொடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

'வடக்கு - கிழக்கு யுத்தம் கெரில்லா யுத்தமாக இருக்கிறது. இதன் காரணமாக இந்த யுத்தத்தில் வெல்வது கஷ்டமானதாகும். இந்த யுத்தம் மேலும் தொடர்ந்தால் அப்பாவி மக்களின் வாழ்வு அநியாயமாகப் போய்விடும். எனவே எனது சமாதான முயற்சி வெற்றிபெற ஒத்துழைப்புத் தருமாறு அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்' — என்றும் அவர் கூறினார்.

(இ-எ-9)

## இலப்பிரச்சினை குறித்து ஆராய
# கே.பி. இரத்னாயக்கா தலைமையில் உபகுழு
### சுதந்திரக்கட்சி நியமித்தது

கொழும்பு, ஜூன் 5

இலப்பிரச்சினை பற்றி கவனிக்க அனுராதபுரம் மாவட்ட எம்.பி. கே.பி.இரத்னாயக்கா தலைமையில் உபகுழு ஒன்றை சுதந்திரக்கட்சி மத்திய செயற்குழு நியமித்துள்ளது.

கண்டி மாவட்ட எம். பி; லக்ஷ்மன் கிரியெல்ல, ஏ.எச். எம். பௌஸி, அலவி மௌலானா ஆகியோர் அங்கம் வகிக்கும் இக்குழுவின் செயலாளராக கம்பஹா மாவட்ட எம்.பி. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே செயற்படுவார்.

## அமைச்சரவை மாற்றம்...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் —

தற்போது இருக்கும் அமைச்சர்கள் எவரும் விலக்கப்படமாட்டார்கள் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

சில தேசியப்பட்டியல் எம். பி க்கள் விலகமறுத்ததைத் தொடர்ந்தே ஜனாதிபதி விஜேதுங்கா அமைச்சுகளில் மட்டும் மாற்றம் செய்யத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருக்கும் காமினி அத்துக்கோறளையிடம் வணப்பாதுகாப்புத் துறை மட்டுமே இருக்கும் என்றும் —

புதிதாக அமைச்சராகும் காமினி திஸநாயக்காவிடம் மகாவலி அபிவிருத் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

## ஜனாதிபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம் தற்போது தெளிவாகியுள்ளது என்றும் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மத்தியில் சமீப நாட்களாகக் குன்றியிருந்த ஆர்வம் இதன் மூலம் மீண்டும் வேகமாகப் புத்தாக்கம் பெறும் என்றும் விக்டர் ஐவன் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார். ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக கட்சிக்குள்ளும் மக்கள் மத்தியிலும் எழுந்துள்ள அதிருப்தியை அடுத்து அந்தச் சிக்கலை வெற்றிகரமாகத் தீர்த்து வைக்க சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளதையே திருமதி பண்டாரநாயக்காவின் புதிய அறிவிப்பு காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5-6)

## தமிழ்—முஸ்லிம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையாகக் கொண்ட பிரதேச சபைகளை உள்ளடக்கிய அந்த உப பிராந்திய சபையின் உறுப்பினர்கள் மூவருக்கு வடக்கு கிழக்கு இணைந்த பிராந்திய சபையில் அமைச்சர் பதவிகளும், அவர்களில் ஒருவருக்கு பிரதி முதலமைச்சர் பதவியும் வழங்குவது என்பதும் அந்த யோசனையில் அடங்கியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தை கல்முனை மாவட்டம் என்றும், அம்பாறை மாவட்டம் என்றும் பிரித்து, சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் இருந்து பிராந்திய சபைக்குத் தெரிவாகும் உறுப்பினர்களில் மக்களின் பேரபிமானத்தைப் பெற்ற ஒருவருக்கு அமைச்சர்பதவி ஒன்றை வழங்குவதும் யோசனையின் ஓர் அம்சமாகும்.

(இ-5)


## யாழ். குடாநாட்டிலிருந்து விரைவில் வெளிவரவிருக்கும் விளையாட்டுத்துறை செய்தி வார இதழுக்கு
## பிரதேச செய்தியாளர்கள் தேவை

விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இளைஞர்களுக்கு முன்னுரிமையும் பயிற்சியும் வழங்கப்படும், சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் மூலம் 01-06-94 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல, 937,
மே/பா, உதயன்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,

[கி-8084]



## தமிழீழ மாணவர் எழுச்சிநாள்

ஜூன் 5

மாணவர் வலு தான் ஆற்றல் மிகு வலு
எம் அறிவும் ஆற்றலும் அன்னை நாட்டிற்கே.
காலை 8-30 மணிக்கு
அனைத்து மாணவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யா/கனகரத்தினம் ம.ம.வி:
மாணவர்கள்

(31274)


## காலத்தினால் செய்த நன்றி

எமது நியாயபூர்வமான கோரிக்கையை ஏற்று மிகுந்த பெருந்தன்மையோடும் கண்ணியத்தோடும் அதை சீர்தூக்கி ஆராய்ந்து எமக்கு நன்மை பயக்கக் கூடிய நடவடிக்கை எடுக்கச் சம்மதித்த கொழும்புப் பிற்குரிய கல்விப் பணிப்பாளர் (வலயம் I) அவர்கட்கும், எமது கருத்துகளுக்கு மதிப்பளித்து இப்பிரச்சினை முடிவுற துணைசெய்த தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையினருக்கும், கல்விக்கழகத்தினருக்கும், எமது கோரிக்கை நிறைவு பெற அரும்பாடு பட்ட அன்பிற்குரிய இன்பன் அண்ணா (தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர்) அவர்கட்கும், ஆதரவுக் கரம் நீட்டிய அனைத்துக் கல்லூரிகளுக்கும், பெற்றோர்களுக்கும், பாடசாலை சமூகத்தினர்க்கும், எமது கருத்துக்களை பிரசுரித்து உதவிய பத்திரிகைகளுக்கும் எமது அகம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி
மாணவர்கள்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(கி-8409)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-06-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org